

திருவண்ணாமலை, மலைவலப் பாதையில், தூய்மை அருணை அமைப்பின் மூலம் பராமரிக்கப்படும், புதிய உடல் ஒப்பனையகத்தை, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆன்மீகப் பெருமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் சி.என்.அண்ணாதுரை.எம்.பி., இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், பா.அரிகிருஷ்ணன், இல.குணசேகரன், துரை.வெங்கட் மற்றும் ஜி.எம்.எஸ். பில்டர் உரிமையாளர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# பொறுப்பேற்ற ஒரேயொரு நாளிலேயே சிவகங்கை மாவட்ட ஆட்சியர் தூக்கியடிப்பு!

## 19 நாளில் மதுரை மாவட்ட ஆட்சியர் இடமாற்றம்!

மதுரை, ஜூன் 22 -

பொறுப்பேற்ற ஒரே நாளில் சிவகங்கை கலெக்டர், 19 நாளில் மதுரை கலெக்டர் இடமாற்றம் செய்யப்பட்டது அதிகாரிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தவெக கூட்டணி ஆட்சி அமைந்ததும் தமிழ்நாட்டின் பல்வேறு பொறுப்புகளில் இருந்த ஐஏஎஸ் மற்றும் ஐபிஎஸ் அதிகாரிகள் தொடர்ந்து மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். அந்த வகையில் மதுரை கலெக்டராக இருந்த பிரவீன்குமார், சமீபத்தில் நாகப்பட்டினத்திற்கு மாற்றப்பட்டார். அங்கு கலெக்டராக இருந்த ஆகாஷ், மதுரை கலெக்டராக மாற்றப்பட்டார்.கடந்த 1ம் தேதி ஆகாஷ், மதுரை கலெக்டராக பொறுப்பேற்றார். சிவகங்கை மாவட்ட கலெக்டராக கடந்த 16ம் தேதி நிஷாந்த் கிருஷ்ணா மாற்றப்பட்டார்.

இவர் கடந்த 18ம் தேதி பிற்பகலில் பொறுப்பேற்றார். நேற்று முன்தினம் ஒருநாள் மட்டும் முழுமையாக சிவகங்கையில் கலெக்டராக பணியாற்றியுள்ளார்.

மறுநாள் காலை விடிந்ததும், அதாவது நேற்று காலையே அவர் மதுரை கலெக்டராக மாற்றப்பட்டார். இதேபோல், மதுரையில் கலெக்டராக பொறுப்பேற்று 19 நாட்களே ஆன நிலையில், கலெக்டர் ஆகாஷ், சிவகங்கைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். இது அதிகாரிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பரஸ்பரம் மதுரையில் இருந்து சிவகங்கைக்கும், அங்கிருந்து மதுரைக்கும் மாற்றம் என இருந்தாலும், ஒரே நாளில் இந்த மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் என்ன என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அரசியல் காரணங்களுக்காக தவெக முக்கிய அமைச்சர்களின் தலையீடு ஏதும் உள்ளதா? கடந்த வாரத்தில் மதுரைக்கு அமைச்சர்கள் ஆய்வுக்கு வந்த நிலையில் அவர்கள் தரப்பில் ஏதேனும் குற்றம் காணப்பட்டதா என்ற சந்தேகங்கள் வருவாய்த்துறையினர் மத்தியில் எழுந்துள்ளது.

இரு நகரங்களுக்கும் இடையே வெறும் 44 கிமீ தூரம் தான் இடைவெளி உள்ளது. இதற்குள் இருவரும் பரஸ்பர மாற்றம் கேட்க வேண்டிய தேவையில்லை. இருவருக்கும் மதுரை, சிவகங்கை சொந்த ஊர் என்ற எந்த தொடர்பும் இல்லை. இதனால், தவெக அரசில் தங்களுக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என ஐஏஎஸ் மற்றும் ஐபிஎஸ் அதிகாரிகளை பாகுபடுத்தி பார்க்கும் வகையில், இந்த இடமாறுதல்கள் இருக்கலாம் என வருவாய்த்துறையினர் கருதுகின்றனர்.

மதுரை கலெக்டராக ஆகாஷ், பொறுப்பேற்றதில் இருந்து கிராமம், கிராமமாக சென்று ஆய்வு பணிகளையும், தமிழர்களின் பாரம்பரிய சின்னங்களான சமணர் படுகைகள் அமைந்துள்ள பகுதிகளையும் ஆய்வு செய்து வருகிறார்.

இது ஆளுங்கட்சியினருக்கு பிடிக்காமல் இருக்கலாம் என்றும் கூறப்படு கிறது. அதே நேரம் மதுரை மாவட்டம், திருமங்கல த்திலுள்ள தியாகி விஸ்வநாததாசின் மணிமண்டபத்தில் அவரது பிறந்த நாளை முன்னிட்டு கடந்த 16ம் தேதி கலெக்டர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், பல்வேறு அமைப்பினரின் போராட்டத்திற்கு பிறகு வந்து மரியாதை செய்ததால் தவெக அரசுக்கு ஏற்பட்ட கெட்ட பெயரை மாற்றும் வகையில் மதுரை கலெக்டரை மாற்றியிருக்கலாம் என்ற பேச்சும் எழுந்துள்ளது.

# மதுரையில் ஆவின் பால் விநியோகம் முடங்கியது!

மதுரை, ஜூன் 22-

மதுரை ஆவினில் ஒப்பந்த வாகனங்கள் நிறுத்தப்பட்ட தால், பால் விநியோகம் முழுமையாக தடைபட்டுள்ளது.

சாத்தமங்கலம் பகுதியில் உள்ள ஆவின் பால் பண்ணை யில் இருந்து, நாள்தோறும் 1.9 லட்சம் லிட்டருக்கு மேல் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக 74 வாகனங்கள் ஒப்பந்த முறையில் எடுக்கப்பட்டு இருந்தன. இந்நிலை யில் 2 ஆண்டு ஒப்பந்தகாலம் முடிவுற்ற நிலையில் ஆறு மாதம் நீட்டிப்பு செய்யப்பட்டது. அதுவும் முடிவடைந்த நிலையில், புதிய ஒப்பந்தத் தின் போது வாகனங்களுக்கான கட்டணத்தை உயர்த்தி தர வேண் டும் என வாகன உரிமையாளர்கள் கோரிக்கை வைத்தனர். அங்குள்ள அதிகாரி ஒருவர், வாகனத்திற்கு தலா ரூ.2 லட்சம் கொடுத்தால் நீங்கள் கேட்கும் தொகையை வழங்க ஏற்பாடு செய்வதாக தெரிவித்துள்ளார்.

அதிர்ச்சியடைந்த ஒப்பந்த வாகன ஓட்டுநர்கள் தங்களுக்கு கூடுதல் தொகை வழங்க கோரி ஆவின் பால் விநியோகம் செய்வதை நிறுத்தியுள்ளனர். இதனால் நேற்று மாலை முதல் மதுரையின் புறநகர் பகுதிகளுக்கு ஆவின் பால் விநியோகம் தடைபட்டுள்ளது. மேலும் நேற்று இரவிலும் ஆவின் பால் விநியோகம் செய்வதற்கான ஒப்பந்த வாகனங்கள் வருகை தராத நிலையில், பால் விநியோகம் செய்வது தடைபடும் என பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

ஒப்பந்த வாகனங்களுக்கான கூடுதல் கட்டணம் வழங்க வேண் டும் எனக் கூறி பால்வளத்துறை அமைச்சர் மற்றும் ஆணையர் உள் ளிட்டோருக்கும் கடிதம் அனுப்பியும் போதிய நடவடிக்கை எடுக்காதது குறிப்பிடத் தக்கது.

# பம்மல் வடக்கு பகுதி 31வது வட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

காஞ்சிபுரம், ஜூன்.22-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி 31வது வட்ட செயல் வீரர்கள் கூட்டம், வட்ட செயலாளர் டி.எம். ஜோசப் தலைமையில் நடைபெற்றது.

வட்ட துணை செயலாளர் தி.ச.நடராஜன், தாம்பரம் மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் ஆர். முரளிதரன், வட்ட துணை செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் மா.விஜயகுமார் வட்ட பிரதிநிதிகள், ஆர்.ஸ்ரீதர், என்.முருகானந்தம், பி.கல்யாணகுமார், எம்.செல்வம், கே.சீனிவாசன்

மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.லாசர், எச்.கே..வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பம்மல் வடக்குப் பகுதிச் செயலாளர் த. ஜெயகுமார் வரவேற்புரையாற்றினார்.

தாம்பரம் மாநகர அவை தலைவர் - தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இதில், பகுதி அவை தலைவர் கே,.சந்திரன், பகுதி துணை செயலாளர் மு. ஸ்ரீதர், மாநகரப் பிரதிநிதிகள் இரா.குமரேசன், இரா.பாபுஜி,

பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஞா.பிரபு, ஆர்.சசிகுமார், எம். ராஜன், எஸ்.ரங்கநாதன் என்.வீராசாமி வி.ராமசாமி எம்.ஏ.பெருமாள், வி. அருள்மொழி, ஏ.ஜெயந்தி, J.மாலதி, சியாமளா, ஆர். யுவராஜ், டி.எஸ்.ரமேஷ், என்.யுவராஜ், ஆர்.நாகராஜ் ஜெ.சி.ராஜா, இ.மணிகண்டன், இ.முகமது அப்துல்லா, வி.முத்து, டி.வி. ரஜினிரவி, எம்..வெங்கடேஷ், என்.பிரேம்குமார், எம்.வசந்த், எஸ்.பிர்லாஸ், பி.எம்.சண்முகம், எம். விஷ்ணு பிரியன், ஏ.தேவராஜ், எஸ்.பாலாஜி, எஸ். காமராஜ், எஸ்.சஞ்சய், பி.துரை ராஜ், எம்.கோபி, எம்.பாலகிருஷ்ணன், எம். சுகுமார், ஜெ.ஜெயசீலன், சி.கபிலன், ஜெ.ருக்மணி, ஜெ. ஞானமணி, ஜி.நந்தினி, ஜெ. மாரியம்மாள், கே.சுமித்ரா, ஜி. சித்ரா, வி.அஞ்சலிதேவி ஆர். அலமேலு, எம். குமுதா, அமுதா, சரோஜா, என். பொன்னம்மாள், முனியம்மாள், ஆர்.வாசுகி, சுந்தரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில், வட்ட இளைஞரணி அமைப்பாளர் கௌதம் விஜயகுமார் நன்றி கூறினார்.



புதூர் ஊராட்சி ஒன்றியம், சின்னையாபுரம் கிராமத்தில் ரூ9.80லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி. மார்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெயமித்திரா, ஒன்றிய பொறியாளர் ரவிச்சந்திரன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கோவை மாநகரப் பகுதிகளில் அடுத்தடுத்து

# கல்லூரி மாணவி உட்பட 5 இளம் பெண்கள் மாயம்!

## காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை!

கோவை, ஜூன் 22-

கோவை மாநகரப் பகுதிகளில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக அடுத்தடுத்து கல்லூரி மாணவிகள் உட்பட 5 இளம் பெண்கள் மாயமாகியுள்ளனர். இதுகுறித்து அந்தந்தப் பகுதி காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை ரத்தினபுரியை சேர்ந்தவர் பிரதீக்ஷா (20), இவர் பி.எஸ்சி. தடயவியல் அறிவியல் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார். விடுமுறைக்காக வீட்டிற்கு வந்திருந்த பிரதீக்ஷா எப்போதும் அலைபேசியைப் பயன்படுத்திக் கொண்டே இருந்ததாகக் கூறப்படு கிறது. கடந்த 17ம் தேதி இரவு, எப்போதும் அலைபேசி பயன்படுத்துவது குறித்து அவரது தந்தை கண்டித்துள்ளார். இதனால் மனவேதனை அடைந்த பிரதீக்ஷா கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். அவரைத் தேடிச் சென்ற அவரது தம்பி, அக்கா பிரதீக்ஷா அடையாளம் தெரியாத நபர் ஒருவரின் பைக்கில் ஏறிச் சென்றதை பார்த்துள்ளார். அதன் பின்னர் அவரது அலைபேசி சுவிட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது. எங்கு தேடியும் அவர் கிடைக்கவில்லை. இது குறித்து புகாரின் பேரில் ரத்தினபுரி காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து அவரை தேடி வருகின்றனர்.

கோவை ஆர்.எஸ். புரத்தை சேர்ந்தவர் காயத்ரி (25), இவர் கடந்த 18ம் தேதி காலை வேலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு வீட்டை விட்டுப் புறப்பட்டுள்ளார். ஆனால், அவர் வேலை செய்யும் இடத்திற்கும் செல்லவில்லை, மாலையில் வீட்டிற்கும் வரவில்லை. அவரது அலைபேசியும் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து ஆர்.எஸ்.புரம் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து காயத்ரியைத் தேடி வருகிறார்.

போத்தனூர், அமீர் சாஹிப் வீதியைச் சேர்ந்தவர் மேகதா பேகம் (22), இவர், கடந்த 17ம் தேதி மாலை அருகில் உள்ள கடைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றுள்ளார். பின்னர் தனது தாயைத் தொடர்பு கொண்டு, தோழியுடன் பேசுவதாக வும், சில நிமிடங்களில் வந்து விடுவதாகவும் கூறியுள்ளார். ஆனால் இரவு நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை. போத்தனூர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் ரவி (43), இவரது மனைவி பூங்கொடி (26), கடந்த 13ம் தேதி மதியம், பூங்கொடி அருகில் உள்ள கோயிலுக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றுள்ளார். அதன் பிறகு அவர் வீடு திரும்பவில்லை. இது குறித்து ராமநாதபுரம் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

கோவை ஒண்டிபுதூரை சேர்ந்தவர் சுபாஸ்ரீ (25), இவர், வால்பாறையில் பரதநாட்டிய வகுப்புகள் நடத்தி வந்தார். மேலும், கோவையில் வங்கித் தேர்வுக்கான பயிற்சியிலும் ஈடுபட்டு வந்துள்ளார். சுபாஸ்ரீ நெல்லையை சேர்ந்த வாலிபர் ஒருவரை கடந்த நான்கு ஆண்டுகளாக காதலித்து வந்துள்ளார், ஆனால் சுபாஸ்ரீயைத் திருமணம் செய்ய அந்த வாலிபர் மறுத்ததாகத் தெரிகிறது. இது குறித்து பொள்ளாச்சி கோட்டூர் காவல்நிலையத்தில் சுபாஸ்ரீ புகார் அளித்துள்ளார். இந்த நிலையில், கடந்த 17ம் தேதி சுபாஸ்ரீ வீட்டை விட்டுவெளியே சென்றார். அதன் பின்னர் சுபாஸ்ரீ வீடு திரும்பவில்லை. பல்வேறு இடங்களில் தேடியும் அவர் கிடைக்காததால், அவரது தாயார் அளித்த புகாரின் பேரில் சிங்கநல்லூர் காவல்துறை யினர் வழக்குப்பதிவு செய்து சுபாஸ்ரீயைத் தேடிவருகின்றனர்.

இதுபோன்ற தொடர் சம்பவங்களால் கோவை மக்கள் பெரும் கலக்கத்தில் உள்ளனர்.

த.வெ.க. நிர்வாகி பெயரை பயன்படுத்தி

# மதுபான பார்களில் மாமூல் கேட்டு மிரட்டல்!

## பார் உரிமையாளர்கள் குமுறல்!

திருநெல்வேலி, ஜூன். 22-

தவெக நிர்வாகி பெயரைப் பயன்படுத்தி மாமூல் கேட்டு மிரட்டுவதாக டாஸ்மாக் பார் உரிமையாளர் வெளியிட்ட வீடியோ பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை பகுதியில் உள்ள அரசு டாஸ்மாக் கடைகளுடன் இணைந்த பார் உரிமையாளர்கள் தங்களை சிலர் தவெக மாவட்ட இணை செயலாளர் பெயரைக் கூறி மிரட்டி, மாமூல் கேட்பதாகப் புகார் தெரிவித்துள்ளனர். குறிப்பாக, மகாராஜா நகர் மற்றும் சரவணா ஸ்டோர்ஸ் அருகே அமைந்துள்ள பார்களில் இந்த சம்பவம் நடந்ததாகக் கூறப்படு கிறது.

இதுகுறித்து பார் உரிமையாளர் கண்ணன் என்பவர் வெளியிட்டுள்ள வீடியோவில், “பாளையங்கோட்டை பகுதியில் உள்ள அனைத்து அரசு மதுபானக் கடை பார்களுக்கும் வரும் 30 ஆம் தேதியுடன் டெண்டர் முடிவடைகிறது. இந்நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் திருநெல்வேலி மாவட்ட இணை செயலாளர் மரிய ஜான் அலுவலகத்தில் இருந்து வருவதாகக் கூறிக்கொண்டு, சிலர் தினந்தோறும் எங்களை மிரட்டி மாமூல் கேட்கின்றனர்.

அவர்களிடம் இது குறித்து கேட்டால், தாங்கள் சமாதானபுரத்தில் உள்ள மாவட்டச் செயலாளர் மரிய ஜான் மகன் அலுவலகத்தில் இருந்து வருவதாக கூறுகின்றனர். தினந்தோறும் இவ்வாறு மிரட்டல் விடுக்கப்படுவதால், நாங்கள் பெரும் அச்சத்தில் உள்ளோம். எங்களால் நிம்மதியாகத் தொழில் செய்ய முடியாத சூழல் நிலவுகிறது.

இதுபோல தொடர்ந்து மிரட்டல்கள் வந்தால், நாங்கள் எப்படி அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய மாதாந்திர டி.டி தொகையை சரியாக செலுத்த முடியும்? எனவே, தமிழக வெற்றி கழகத் தலைமை இதுகுறித்து விசாரித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கோரிக்கை விடுத்துள்ளார். இத்துடன் கடைகளுக்கு மாமூல் வாங்க வரும் நபர்கள் தொடர்பான சிசிடிவி காட்சிகளையும் அவர் வெளியிட்டுள்ளார்.

தவெக கட்சி நிர்வாகிகள் பெயரில் பார் உரிமையாளர்களுக்கு மிரட்டல் விடுக்கப்படு வதாக எழுந்துள்ள இந்த புகார் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, தமிழ்நாட்டில் தவெக ஆட்சி அமைத்த பிறகு தொடர்ச்சியாக அந்த கட்சியினர் அரசு அலுவலகங்களில் ஆய்வு நடத்தி, ‘ரீல்ஸ்’ வெளியிட்டு வருகின்றனர். இதுபோன்ற செயல் பொதுமக்களை முகம் சுளிக்க வைத்துள்ளதாக தெரிகிறது.

அதேபோல் டாஸ்மாக் உள்பட பல்வேறு அரசு நிறுவனங்களுக்கு சென்று மாமூல் கேட்பதாகவும், தொடர்ச்சியாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதுபோன்ற சூழ்நிலையில் நெல்லையில் உள்ள டாஸ்மாக் பாரில் தவெக நிர்வாகி பெயரை பயன்படுத்தி, சிலர் மாமூல் கேட்டு மிரட்டியதாக வெளியான வீடியோ சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

# திருவாரூர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வீரா.தேசபந்து மறைவு!

## பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், ஜூன்-22.

திருவாரூர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வீரா.தேசபந்து அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த வீரா.தேசபந்து அவர்கள் மன்னார்குடி ஒன்றியம் முக்குளம்சாத்தனூர் ஊராட்சி மன்றத்தின் முன்னாள் தலைவராகவும், தி.மு.க. விவசாய அணி திருவாரூர் மாவட்ட அமைப்பாளருமாக தொடர்ந்து இரண்டுமுறை இருந்து கழகப்பணி ஆற்றியவர் ஆவார்.

வீரா.தேசபந்து அவர்களின் மறைவின் தகவல் அறிந்த மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன், விவசாய தொழிலாளர் அணி மாநில தலைவர் உ.மதிவாணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு இரங்கலை தெரிவித்தனர்.


திருவாரூர் மாவட்ட திமுக சார்பில் மறைந்த வீரா.தேசபந்து அவர்களுக்கு மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்ற இரங்கல் ஊர்வலம் நடைபெற்றது.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆதிரெங்கம் எஸ்.பி. முருகதாஸ்

### ஜூன் 22 (2014)



இளமைக் காலம் முதல் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு திருத்துறைப்பூண்டி பகுதியில் கழக வளர்ச்சியில் பெரும் பங்கெடுத்து, கழகத்திற்கு உறுதுணையாக இருந்தவர்.

கிளைச் செயலாளர், ஒன்றியப் பொறுப்பாளர், ஒன்றியச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

ஒன்றியக்குழு உறுப்பினர், ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் கூட்டுறவு வீட்டு வசதி சங்க துணைத் தலைவராகவும் பொறுப்பேற்று பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் தன் உடல்நிலை பாதிக்கப்பட்டபோதும் பங்கேற்று சிறை சென்றவர். தனது பேச்சாற்றலால் கழக அரசின் திட்டங்களை மக்களிடம் எளிதாக கொண்டு சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.